**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பணியமைப்பு – 2015–2016–ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை – மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் அறிவிப்புகள் – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் செல்லிடப்பேசி இணைப்பு (CUG Connection) வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந1) துறை**

அரசாணை (நிலை) எண்: 122 நாள்: 30.11.2015

மன்மத, கார்த்திகைத் திங்கள் 14–ஆம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:

ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடித ந.க.எண்.ம1/24689/2014, நாள் 01.10.2015.

---

**ஆணை:**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின், 2015–2016–ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் இத்துறைச் சார்ந்த பல்வேறு அறிவிப்புகளுடன் கீழ்க்காணும் அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார்கள்:-

> "தமிழகமெங்கும் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்களின் அலுவகங்களைச் சார்ந்த அலுவலர்களை எளிதில் தொடர்பு கொண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கான அரசின் திட்ட செயலாக்கத்தை விரைவுபடுத்த, அனைவருக்கும் செல்லிடபேசி (CUG) இணைப்பு வழங்கப்படும்."

2. மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக, ஆதி திராவிடர் நல இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அரசின் திட்டங்களை செயல்படுத்த சென்னையில் ஆதிதிராவிடர் நல இயக்குநரகமும், மாவட்ட அளவில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகமும், வட்ட அளவில் ஒரு மாவட்டத்திற்கு இரண்டு அல்லது மூன்று ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் அலுவலகங்களும் செயல்பட்டுவருகின்றன எனவும், தற்போது இவற்றிற்கிடையே தகவல் தொடர்பு அலுவலகத் தொலைபேசி வழியே மேற்கொள்ளப்படுகிறது எனவும், இன்றைய நவீன தகவல் தொடர்பில் அலைபேசி ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது எனவும், குறுஞ்செய்தி அனுப்பவும் உடனுக்குடன் தொடர்பு கொள்ளவும் அலைபேசி அவசியமாகும் எனவும், தற்போது அரசால் வழங்கப்பட்ட அலைபேசி எண்கள் ஏதும் ஆதிதிராவிடர் நலத்துறையில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், வருவாய் துறையில் அனைத்து துணை ஆட்சியர்கள், வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் அரசால் அலைபேசி அட்டை (SIM) வழங்கப்பட்டுள்ளது எனவும், இவ்வாறு வழங்கப்படுவதால் அலுவலர்கள் மாற்றம் செய்யப்பட்டாலும் தொலைபேசி எண்கள் மாற்றம் இல்லாமல் நிரந்தரமாக இருக்கும் எனவும், பொது மக்கள் எளிதாக அலுவலர்களை தொடர்பு கொள்ள ஏதுவாகும் எனவும், இவ்வலைபேசி இணைப்புக்கான எண்குறியீடு அட்டை (Sim card) அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் / கண்காணிப்பாளர்கள் / தனி வட்டாட்சியர்கள் / உதவி கணக்கு அலுவலர்கள் / உதவி கல்வி அலுவலர்கள் / இயக்குநர் அலுவலக அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பாளர்களுக்கு செல்லிடப்பேசி இணைப்பு **(CUG)** எண்குறியீடு அட்டைகள் (Sim card) வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

4. ஆதி திராவிடர் நல இயக்ககம்/ மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அலுவலகப் பணியாளர்களுக்கு ரூ.60/- மதிப்பில் 230 செல்லிடப் பேசி இணைப்புகளுக்கான எண்குறியீடு அட்டைகள் (SIM cards) வழங்குவதன் மூலம் கீழ்க்கண்டவாறு ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினம் ஏற்படும் எனவும், அதனடிப்படையில் ரூ.1.66 இலட்சம் தொகையினை 2015-2016 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் புதிய கணக்குத் தலைப்பு துவக்கி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

| | தேவைப்படும் தொகை (ரூ.) | |
|---|---|---|
| இயக்குநர் அலுவலக அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள் மற்றும் தட்டச்சர்கள். | 104 x 60 | 6240.00 |
| 32 மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் | 32 x 60 | 1920.00 |
| 32 மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலக கண்காணிப்பாளர்கள் | 37 x 60 | 2220.00 |
| உதவி கணக்கு அலுவலர்கள் -26<br>உதவி கல்வி அலுவலர்கள் -06<br>அலுவலக மேலாளர் (வட்டாட்சியர் நிலை) -01<br>இளநிலை பொறியாளர்கள் -24<br>------<br>மொத்தம் 57 | 57 x 60 | 3420.00 |
| மொத்தம் மாதம் ஒன்றுக்கு | | 13,800.00 |
| ஒரு ஆண்டுக்கு தேவைப்படும் மொத்தத் தொகை | | 1,65,600.00 |

5. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்ககங்களைச் சார்ந்த அலுவலர்களை எளிதில் தொடர்பு கொண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கான அரசின் திட்டச் செயலாக்கத்தை விரைவுபடுத்த அனைத்து பணியாளர்களுக்கும் செல்லிடப்பேசி இணைப்பு (CUG Connection) வழங்கப்படும் என்ற மாண்புமிகு அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களது அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்கக அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள், 32 மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலர்கள், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அலுவலகக் கண்காணிப்பாளர்கள், உதவி கணக்கு அலுவலர்கள், உதவி கல்வி அலுவலர்கள், அலுவலக மேலாளர்( வட்டாட்சியர் நிலை) மற்றும் இளநிலைப் பொறியாளர்கள் ஆகியோருக்கு செல்லிடப்பேசி இணைப்பு (CUG Connection) - இிற்கான எண்குறியீடு அட்டைகள்(Sim cards) உரிய கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றி வாங்கி வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்தும், இதன்பொருட்டு ரூ.1.66 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தாறாயிரம் மட்டும் ) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம், கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–80 பொது–001– நெறிபடுத்தலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது –AA- ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை மாவட்டப் பணியாளர்கள்–05 அலுவலகச் செலவுகள் – 01– தொலைபேசிக் கட்டணங்கள்.
>
> (தகவல் தொகுப்பு குறியீடு 2225 80 001 AA 0516)"

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ளத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2015–2016 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 5—ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், பத்தி 5–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2015–2016 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் அவர்கள் அறுவுறுத்தப்படுகிறார்.

8. ஒவ்வோராண்டும் செல்லிடப்பேசி இணைப்பிற்காகும் (CUG Connection) தொடரும் செலவினத்தை அந்தந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட நிதியொதுக்கம் மூலம் மேற்கொள்ளும் வகையில் உரிய முன்மொழிவினை அரசின் நிதித் (வ.செ) துறைக்கு தவறாது நேரடியாக அனுப்புமாறு ஆதி திராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.64393/ஆதி(ம)பந/2015–1, நாள் 27.11.2015–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1436 (ஆயிரத்து நானூற்று முப்பத்து ஆறு).

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம்,சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
முதன்மை மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 6 /18 /35.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) , சென்னை – 8
அனைத்து மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்.

நகல்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலச் செயலர் அவர்களின்
முதுநிலை தனிச்செயலர், சென்னை – 9
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (ஆதிந–5)த் துறை சென்னை – 9
நிதி(ஆதி(ம)பந/வரவு செலவு (பொது –II))த் துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30.11.15
பிரிவு அலுவலர்